# தி.மு.க.வின் பவளவிழா நிறைவு ஆண்டு:

# ஒரு பண்பாட்டு அரசியல் இயக்கத்தின் நெடும் பயணம் 3

நேற்றைய தொடர்ச்சி...

கலைஞர் தேர்தல் களத்தில் வழக்கம்போல் இயங்கினார். அ.தி.மு.க.வினரின் ஆட்டம் மிக அதிகமாக இருந்தது. ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏடு; தி.மு.க. கட்டுப்பாட்டுடன் திகழுகிறது என்று எழுதியது. இந்தத் தேர்தலில் பிரதமர் இந்திராவின் மரணமும் எம்.ஜி.ஆரின் நோயும் தி.மு.க.வைத் தோற்கடிக்கச் செய்தன. இதனைச் சாவும் நோவும் நம்மைத் தோற்கடித்துவிட்டன எனக் கழகத்தினர் விமர்சித்துக் கொண்டனர். 1984-சட்டமன்றத் தேர்தலில் கலைஞர் போட்டியிடவில்லை.

1984-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கட்சிகள் பெற்ற இடங்களின் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| தி.மு.க. | - 24 |
| அ.தி.மு.க. | - 133 |
| காங்கிரஸ் | - 62 |
| சி.பி.ஐ. | - 2 |
| சி.பி.ஐ.(எம்.) | - 5 |
| ஜனதா | - 3 |
| பார்வர்டு பிளாக் | - 1 |
| சுயேச்சைகள் | - 2 |
| | 234 |

தமிழ்நாட்டில் மூன்றாவது முறையாக எம்.ஜி.ஆர். ஆட்சி அமைந்தது. ஒன்றிய அரசில் இராஜீவ் காந்தி பிரதமர் ஆனார். 1984 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. 29.49 சதவிகிதம் வாக்குகளைப் பெற்று 24 இடங்களைப் பெற்றது. அ.தி.மு.க. 37.09 சதவிகித வாக்குகளைப் பெற்று 133 இடங்களைப் பெற்றது.

1984 டிசம்பர் இறுதியில் சட்டமன்றத் தேர்தல் நடந்தது. ஆனால் எம்.ஜி.ஆர். பதவி யேற்றுக் கொண்டது 10.2.1985 இல்! பதவியேற்றது முதல் முதல்வருக்கு துறைகள் எதுவும் ஒதுக்கவில்லை. இது அரசியல் சட்ட முரண்பாடு என்று அப்போதைய தி.மு.க. பொருளாளர் எஸ்.ஜே.சாதிக் பாட்சா உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

தமிழ்நாட்டின் பிரச்சினைகளைப் பற்றியும் சாதனைகளை நிகழ்த்துவது குறித்தும் எம்.ஜி.ஆர். சட்டமன்றத்தில் விவாதிப்பதைத் தவிர்த்தார். சட்டமன்ற மேலவையிலும் பொது மேடைகளிலும் கலைஞரைப் பற்றியே பேசினார்.

“மக்களைச் சந்திக்க யோக்கியதை இல்லாததால்தான் கலைஞர் மேலவைக்கு வந்து இருக்கிறார்” என்று நாவலரும், “கலைஞர் மேலவையில் அரசியல் விதவையாக உட்கார்ந்து இருக்கிறார்” என்று ஆர்.எம்.வீரப்பனும் பேசினார். இந்தப் பேச்சு அ.தி.மு.க.வின் அதிகாரப்பூர்வமான ஏட்டில் வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி கலைஞர் மேலவையில் விவாதத்தைக் கிளப்பினார்.

நாவலர் ‘தாம் பேசாத கருத்து வெளிவந்து இருப்பதாக’ சொன்னார். ஆனால் ஆர்.எம்.வீரப்பன் ஒப்புக் கொண்டார். பேசாத ஒன்று வந்து இருப்பதாக நாவலர் சொன்னதைத் தாம் ஏற்றுக் கொள்வதாக கலைஞர் குறிப்பிட்டார். ஆர்.எம்.வீ. ஒப்புக் கொண்டார் ‘நான் அதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை’ என்று சொன்னார் கலைஞர்.

**1985ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாவது வாரத்தில் பெருமழை பெய்தது. சென்னை நகரமெங்கும் வெள்ளக்காடாக மாறி இருந்தது. தமிழகம் முழுவதையும் பெருத்த சேதம்- இழப்புகள் ஏற்பட்டு மக்கள் பெருந்துன்பத்திற்கு ஆளாகி இருந்தார்கள்.**

**எம்.ஜி.ஆரின் இராமாவரம் தோட்டம் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. அவரின் வீட்டின் உள்ளே வெள்ளம். அவரைப் படகில் அழைத்து வந்தனர். நாடு வெள்ளத்தில் மிதக்கிறது. இவர் 5 நட்சத்திர ஹோட்டலில் தங்கினார். மக்களைப் பற்றி கவலைப்படவில்லை. எதிர்க்கட்சிகள் கேட்டுதான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தையே எம்.ஜி.ஆர். நடத்தினார். பெருமழையும் வெள்ளமும் நின்ற பிறகே எம்.ஜி.ஆர். தனது இல்லத்திற்குச் சென்றார் என்று ‘இந்து நாளேடு’ எழுதியது.**

**ஆனால் இந்த வெள்ளக் காலத்தில் கலைஞர் முதல்வரைப் போல பணியாற்றினார். உடைப்பெடுத்த மதுராந்தகம் ஏரியை நேரில் சென்று பார்த்தார். பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். நடவடிக்கை எடுக்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டார். தம்மால் முடிந்த உதவிகளை கழக அமைப்புகள் செய்தன.**

மீனவர் போராட்டமும், ஆசிரியர்கள் போராட்டமும் மழை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டன.

1986 பிப்ரவரியில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் தி.மு.க. மகத்தான வெற்றியை பெற்றது. அ.தி.மு.க.வுக்கு இந்த வெற்றி பலத்த சரிவை உண்டாக்கி இருந்தது. இதனை எம்.ஜி.ஆரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

மேலவையில் கலைஞர் எதிர்க்கட்சித் தலைவர் ஆகக் கூடாது என்பதற்காக பெரு முயற்சி எடுத்துக் கொண்டார். ஆனால் அது நடைபெறவில்லை. 23.04.1986 முதல் கலைஞர் மேலவை எதிர்க்கட்சித் தலைவரானார். இதனால் எம்.ஜி.ஆருக்கு எரிச்சல் அதிகமாயிற்று.

முதல்வரான பிறகு எம்.ஜி.ஆர். பல வேடிக்கைகளை அரங்கேற்றினார். அப்படி அரங்கேற்றிய நிகழ்ச்சி நிர்மலா எனும் நடிகையை மேலவைக்கு ஆளுநர் மூலமாக நியமனம் செய்தது எம்.ஜி.ஆர்.அரசு. அதன் மீது ஆளுநரும் உத்தரவிட்டார். ஆனால் நடிகை நிர்மலாவால் மேலவை உறுப்பினர் ஆக முடியவில்லை. ஏனெனில் அவர் ‘திவால்’ ஆனவர்; கடனாளி.

ஆனால் அந்த நடிகையோ ரூ.10 இலட்சம் பழைய கடனை ஒரே தவணையில் கட்டினார். இது மேலும் சர்ச்சையாயிற்று, அவர் மேலவை உறுப்பினராக தகுதி உடையவர் ஆக்கிக் கொண்டாலும் அந்த நடிகை விலகல் கடிதத்தை ஆளுநரிடம் கொடுக்க வேண்டியதாயிற்று.

உள்ளாட்சித் தேர்தல்களில் தி.மு.க.வின் அமோக வெற்றி, கலைஞர் மேலவையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆனது, நடிகை நிர்மலாவை மேலவை உறுப்பினராக்க முடியவில்லை என்கிற எம்.ஜி.ஆரின் தோல்விகள் எல்லாம் எங்கே போய் முடிந்தன?

1986 மே 9 ஆம் நாள் தமிழகச் சட்டமன்ற மேலவை கலைக்கப்படும் எனும் செய்தியில் முடிந்தது. மேலவை இரத்து செய்யப்படும் எனும் தீர்மானம் 14.05.1986 இல் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் அதற்கு ஒப்புதல் அளித்தன. குடியரசுத் தலைவரின் இசைவுக்குப் பிறகு 01.11.1986 மேலவை இரத்து செய்யப்பட்டுவிட்டது.

மேலவை கலைக்கப்படும் போது அதன் தலைவராக சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் இருந்தார். மேலவை எதிர்க்கட்சித் தலைவராக கலைஞர் இருந்தார்.

கலைஞர் சட்டமன்றத்தில் இல்லை. மேலவையில் அவர் இருக்கிறார் என்பதற்காகவே மேலவையைக் கலைத்தார் எம்.ஜி.ஆர்.

1986 ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டுகளில் எம்.ஜி.ஆர். ஆட்சியின் அவலங்கள் படுபாதாளத்திற்கு சென்று கொண்டு இருந்தன. அ.தி.மு.க. அமைச்சர்கள் இலஞ்சப் பணம் விகிதத்தை ‘பிளிட்சு’ ஏடு எழுதி இருந்தது. எம்.ஜி.ஆரின் நிர்வாகத்தைக் குறை கூறி ஆளுநர் குரானாவின் கடிதம் ஒன்று ‘இந்தியா டுடே’வில் வெளியாகி இருந்தது.

இந்தப் பிரச்சினைகளையெல்லாம் முரசொலி கடிதத்தில் கலைஞர் விவாதித்து இருந்தார். ஒன்றிய அரசு தனது புதிய கல்விக் கொள்கையின் மூலம் இந்தியைத் திணிக்கும் போக்கையும் வெளிப்படுத்தி இருந்தது. இதனை எதிர்த்து தி.மு.க. பொதுக் கூட்டங்களை நடத்தியது. கலைஞர் கழகத் தோழர்களுக்கு ‘தொண்டர் படை அமையுங்கள்’ என்று ‘முரசொலி’யில் உடன் பிறப்பு மடல் தீட்டினார்.

கலைஞர் எழுதியதைப் பார்த்த எம்.ஜி.ஆர். தனது கட்சிக்காரர்களுக்கு ஆளுக் கொரு கத்தியை வைத்துக் கொள்ளுமாறு கூறினார். இது குறித்து ஏடுகள் தலையங்கங்கள் எழுதின. கலைஞர் கூறிய கருத்துக்கும் எம்.ஜி.ஆர். கூறிய கருத்துக்கும் வேறுபாடு இருந்தது. எம்.ஜி.ஆரின் இப்பேச்சால் தமிழ் வார ஏடுகளில் நிரம்ப நகைச்சுவைத் துணுக்குகள் இடம் பெற்றன.

எம்.ஜி.ஆர். பேசிய பேச்சுக்குக் கலைஞரின் ‘வேண்டுகோள்’ தான் காரணம் என்று கருதிய இந்துவும் இந்தியன் எக்ஸ்பிரசும் கலைஞரையும் எம்.ஜி.ஆரையும் கண்டனம் செய்து எழுதின. கலைஞர், ‘இந்து- இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏடுகளின் விஷமம் என்ற தலைப்பில் விளக்கம் அளித்தார்.

எம்.ஜி.ஆர். ‘கத்தி வைத்துக் கொள்ளுங்கள்’ என்று பேசியதற்கு 16.07.1986 தேதியிட்ட ‘இந்துஸ்தான் டைம்ஸ்” தலையங்கம் எழுதியிருந்தது.

அதில் ‘எம்.ஜி.ஆர். உடல் நலம் இல்லாமல் இருக்கிறார்; மன நலமும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அவர் முதலமைச்சராக நீடிக்கக் கூடாது’ என்று குறிப்பிட்டு இருந்தது.

இதுவன்றி, தி.மு.க. 22 சட்டமன்ற உறுப்பினர்களையே பெற்றிருக்கிறது. ஆனால் அப்போது சென்னை மாவட்டச் செயலாளராக இருந்த டி.ஆர்.பாலு மாநிலங்களவை உறுப்பினரானார். போட்டியிட்ட எட்டு வேட்பாளர்களில் இவரே அதிகம் வாக்கு பெற்றிருந்தார். அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ஜி.ஆரின் கட்டளையை நிறைவேற்றவில்லை.




எம்.ஜி.ஆர். ஆட்சியின் நிர்வாகம் குலைந்துவிட்டது என்று கலைஞர் ஒரு பரபரப்புக் கடிதத்தைக் காட்டினார். 1986 பிப்.2 இல் உள்துறை செயலாளர் எழுதிய கடிதம் தான் அது! அதை மே 22 ஆம் தேதி கலைஞர் வெளிப்படுத்தினார். அந்தக் கடிதத்தில் இட மாற்றங்கள், நியமனங்கள், நிதி உதவிகளுக்கு எம்.ஜி.ஆரின் சிபாரிசு கையெழுத்துடன் சில கடிதங்கள் உலா வருகின்றன. இவை “போர்ஜரி” கையெழுத்தாகும் என்று பொது இலாகா அதிகாரிகளை அவர் எச்சரித்து இருந்தார்.

1986 நவ.17இல் கலைஞர் கழகச் செயற்குழுவினைக் கூட்டினார். புதிய கல்விக் கொள்கையின் மூலம் இந்தி பரப்பப்படுவதை எதிர்த்துப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. பேராசிரியர் அரசியல் சட்டத்தின் 17-ஆவது பிரிவைக் கொளுத்தினார். 301 பேர் கைது செய்யப்பட்டனர்.

அரசியல் சட்ட எரிப்புக்காகச் சட்டமன்ற உறுப்பினர்களான பேராசிரியர், சு.பாலன், அ.செல்வராசன், ப.பொன்னுரங்கம், பரிதி இளம் வழுதி, கோவை மு.இராமநாதன், இரா.சின்னசாமி ஆகியோரின் பதவிகள் பறிக்கப்பட்டன. இதற்காகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


**க.திருநாவுக்கரசு**

திராவிட இயக்க ஆய்வாளர்




கலைஞர் 09.12.1986 இல் வள்ளுவர் கோட்டத்தின் அருகில் அரசியல் சட்டத்திற்குத் தீ வைத்துப் பொசுக்கினார். 1986 இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தினால் 20,068 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். இச்சிறை வாசத்தின் போதுதான் கலைஞருக்கு கைதி உடை அணிவிக்கப்பட்டது.

கலைஞரை விடுதலைச் செய்யக் கோரி தீக்குளிப்புகள், நஞ்சருந்தியோர், காவல் துறை தாக்குதல்கள், சிறைக் கோட்டங்களில், கலைஞருக்கு கைதி உடை என்று கேள்விப்பட்டவுடன் என இப்படி 15 கழகத் தோழர்கள் தமது இன்னுயிரை இழந்தனர்.

இப்படி நாடெங்கும் பதற்ற நிலை நிலவியது. எம்.ஜி.ஆர். அரசு பயந்து தண்டனைக் காலம் முடிவதற்குள் 02.02.1987 காலை 11.05 மணிக்கு கலைஞர் திடீரென்று விடுதலை செய்யப்பட்டார்.

1987-ஆம் ஆண்டு கலைஞருக்குப் போராட்ட ஆண்டாகவே முடிந்தது. எம்.ஜி.ஆர். கலைஞரையும் தி.மு. கழகத்தையும் ஒடுக்க முயன்று தோல்வியையே தழுவினார். கலைஞருக்கு ஈடு கொடுக்க எம்.ஜி.ஆரால் முடியவில்லை என்றே ஏடுகள் எழுதின.

1987 ஜீன் மூன்றாம் வாரத்தின் தொடக்கத்திலேயே எம்.ஜி.ஆருக்கு மீண்டும் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. டிச.24 கிறிஸ்துமஸ் நள்ளிரவு-அதாவது 25 ஆம் தேதி இரவு 1:00 மணிக்கு அவருக்குத் தூக்கத்திலேயே நெஞ்சுவலி ஏற்பட்டது. மூன்று மணிக்கு அவர் மரணம் அடைந்தார். அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு 5.45 மணிக்கு வெளியிடப்பட்டது. கலைஞர் எம்.ஜி.ஆர். மறைவுச் செய்தி அறிந்தவுடன் ஆர்க்காடு வீராசாமி, டி.ஆர்.பாலு ஆகியோரோடு இராமாவரம் இல்லம் சென்று தமது அஞ்சலியைச் செலுத்தினார். மிக அருமையான இரங்கல் குறிப்பை எழுதினார். அதில் ஒரு பகுதியை மட்டும் இங்கே தருகின்றோம்.

“என் சிந்தைக்கினிய நண்பர் செல்வாக்கு மிக்க முதலமைச்சர் குறுகிய காலத்தில் ஒரு கட்சியை உருவாக்கி அதனை ஆளுங்கட்சியாக்கிய ஆற்றல் படைத்தவரின் இழப்பைக் கேட்டு இந்த நாடே துயரத்தில் ஆழ்ந்து இருக்கிறது.

அவரது மறைவால் கண்ணீர் வடிக்கும் இந்த நேரத்தில் தமிழ்மக்கள் அனைவரும் அமைதியாகவும் கசப்புணர்வு காழ்ப்புணர்வுகளையும் தவிர்த்தும் ஒற்றுமையைக் கட்டிக் காப்பதற்கும் உறுதி மேற்கொள்ளுவோமாக!”

எம்.ஜி.ஆர். மரணம் அடைந்த அன்று அண்ணா சாலையில் இருந்த கலைஞர் சிலையை ஒருவன் உடைத்தெறிந்தான். போலீஸ் ஒன்றும் செய்யவில்லை. எம்.ஜி.ஆர். கட்சியின் தலைவர்கள் எவரும் அது குறித்து எந்தவித கண்டனமும் தெரிவிக்கவில்லை. ஆனால் தமிழக மக்கள் கலைஞரின் சகிப்புத் தன்மையைப் புரிந்து கொண்டனர்.

எம்.ஜி.ஆர். மரணத்திற்குப் பின் அ.தி.மு.க. இரு அணிகளாகப் பிரிந்தன. தி.மு.க.வுக்கு 12 சட்டமன்ற உறுப்பினர்களே இருந்தனர். ஜானகி அணியின் பின்னே ஆர்.எம்.வீ.யும் ஜெயலலிதா அணியின் பின்னே நாவலரும் இருந்தனர். பிரதமர் இராஜீவை சந்தித்து ஜானகி எம்.ஜி.ஆர். ஆதரவினை கோரினார். இங்கே இ.காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து எந்தவித ஆதரவு சைகையும் ஜானகி எம்.ஜி.ஆருக்கு கிடைக்கவில்லை. கலைஞரை ஆதரவுக்கோரி ஆர்.எம்.வீ. கலைஞரின் வீட்டிற்கு வந்தார். கலைஞர் ஆதரவு தரவில்லை.

**ஜானகி எம்.ஜி.ஆர். 07.01.1988இல் பதவியேற்றார். 30.01.1988இல் மாலை 6:00 மணிக்கு பதவியை இழந்தார். 28ஆம் தேதி ஜானகி எம்.ஜி.ஆரால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியவில்லை. ஜானகி எம்.ஜி.ஆர். அதிர்ச்சிக்கு ஆளானார். இது குறித்து கலைஞரும் கவிஞர் அப்துல் ரகுமானும் எழுதிய விமர்சனங்கள் மறக்க முடியாதவை ஆகும்.**

**கலைஞரின் விமர்சனம்:-**

**(1)கீரிடத்தைச் சூட்டிவிட்டு கழுத்தை வெட்டினார்கள்....”**

**அப்துல் ரகுமானின் விமர்சனம் :**

**(2) “பாம்பின் நிழலில் இளைப்பாறப் போன தவளை அதன் விளைவை அனுபவித்து தான் தீர வேண்டும்”**

**“கௌரவர்க்குள்ளே நடந்த கலவரத்திலே குருசேத்திரம் சுலபமாக முடிந்துவிட்டது”**

இந்தச் சந்தார்ப்பத்தில் ‘தி வீக்’ ஏடு எம்.ஜி.ஆர். கட்சி குறித்தும் அவர் பற்றியும் ஒரு விமர்சனக் கட்டுரையை எழுதியிருந்தது. அதிலிருந்து சாரமாக மூன்று புள்ளிகளை இங்கே தர விரும்புகின்றோம்.

(1) ஏதோ கொள்கையில் ஆழ்ந்த நம்பிக்கை வைத்து பெரியார், அண்ணா இயக்கத்தில் எம்.ஜி.ஆர். சேர்ந்தார் என்பதே சந்தேகத்திற்குரியது,

(2) அ.இ.அ.தி.மு.க. என்பது ஒருதனி மனிதனின் கட்சி. அங்கே எம்.ஜி.ஆர் ஒருவர் தான் விஷயமே, சொல்லிக்கொள்கிற அளவுக்கு அக் கட்சிக்கு இலட்சியம் எதுவும் கிடையாது. இந்தியை எதிர்ப்பதாகச் சொல்வதும் வெறும் பாசாங்குதான்!

(3) ஜானகியிடமோ ஜெயலலிதாவிடமோ “திராவிடர் இயக்கம்” என்று சொல்லக் கூடிய எந்த அம்சமும் கிடையாது. சித்துவிளையாட்டுக்காரர்களும் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஆதாயம் தேட முனைகிறவர்களும் ஒரு மகாராணியை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

எவ்வளவு அற்புதமாக எழுதியிருக்கிறது ‘தி வீக்!’

அ.தி.மு.க., எம்.ஜி.ஆர். மரணத்திற்குப் பிறகு அவர்கள் அணிகளில் யாரை அரியணையில் அமர வைப்பது என்கிற போட்டியில் ஈடுபட்டு கொண்டு இருந்தது. ஆனால் தி.மு.கழகம் அமைதியாக தனது அமைப்புகளுக்குரிய தேர்தலை நடத்தி வந்தது. இது குறித்து 03.01.1988 தேதியிட்ட ‘தினமணி’,

“தி.மு.க. கட்சி தேர்தல்கள் முழு மூச்சுடன் நடைபெற்று வருகின்றன. தலைமைக் கழக நிர்வாகிகளின் தேர்தல் பிப்ரவரி 2ஆம் தேதியுடன் முடிவடையும்.

....தி.மு.க.விலே மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை முறைப்படியாகத் தேர்தல் நடத்தப் பட்டு வருகிறது, 1977 க்குப் பிறகு தொடர்ந்து தோல்வியைச் சந்தித்த போதிலும் கூட கட்சித் தேர்தலில் தி.மு.க.வினருக்கு உற்சாகம் குறையவில்லை”

என்று எழுதிற்று. இந்த ‘ஸ்தாபன பலத்தை’ இன்று அ.தி.மு.க.வில் பார்க்க முடியாது. ஆகவேதான் அன்று ‘தினமணி’ தி.மு.க.வின் உறுதியைப் பாராட்டி எழுதியிருக்கிறது.

எம்.ஜி.ஆர். மரணத்திற்குப் பிறகு டெபோனேர் (பிப்ரவரி 1988) பத்திரிகையில் கே.ஆர். சுந்தர்ராஜன் கட்சியை, ஆட்சியை விமர்சனம் செய்து எழுதிய ஒரு கட்டுரையொன்று வெளியாயிற்று. அதன் கடைசிப் பகுதி எம்மை வெகுவாக கவர்ந்தது. அந்தப் பகுதி இது தான்:

தொடர்ச்சி... நாளை



நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமகிரிப்பேட்டை ஒன்றியம் நாமகிரிப்பேட்டை பேரூர், தண்ணீர்பந்தல்காடு 4 வது வார்டு எம்.ஜி.ஆர். காலனி அ.தி.மு.க. கிளை துணைச் செயலாளர் முருகேசன் தலைமையில் இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி சார்ந்த 100 பேர் உறுப்பினர் அட்டையுடன் அ.தி.மு.க.விலிருந்து விலகி, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முனனிலையில் தி.மு.க.வில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பேரூர் கழக செயலாளர் அன்பழகன், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் எம்.சுரேஷ் ஆகியோர் ஏற்பாட்டில் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதவியேற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து சேலம் இரா. ராஜேந்திரன் சுற்றுலாத் துறை அமைச்சராகவும் பதவி ஏற்றுக் கொண்டதையொட்டி சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூரில் நகரச் செயலாளர் கே. பாலசுப்பிரமணியன் தலைமையில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கினார். இதில் நகர நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.